## 1.1 முனைப்பழியுள்ள அபிப்பிராயம்

சமுர்த்தி சமூக அபிவிருத்தி நம்பிக்கைப்பொறுப்பு நிதியத்தின் 2022 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமைக் கூற்று மற்றும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிச் செயலாற்றல் கூற்று, தேறிய சொத்துக்கள் மாற்றங்கள் கூற்று மற்றும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான காசுப்பாய்ச்சல் கூற்று மற்றும் நிதிக்கூற்றுக்களுக்கான குறிப்புக்கள் பொழிப்பாக்கப்பட்ட முக்கியமான கணக்கீட்டுக் கொள்கைகளுடன் கூடிய 2022 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலைமைப்பின் 154(3) ஆம் உறுப்புரையிலுள்ள ஏற்பாடுகளுடன் சேர்த்து வாசிக்கப்படும் 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் ஏற்பாடுகளின் பிரகாரம் எனது பணிப்பின் கீழ் கணக்காய்வு செய்யப்பட்டன. பாராளுமன்றத்திற்குச் சமர்ப்பிக்கப்பட வேண்டுமென நான் கருதுகின்ற எனது கருத்துரைகளும் அவதானிப்புகளும் இந்த அறிக்கையில் காணப்படுகின்றன.

இந்த அறிக்கையின் 1.5 ஆம் பந்தியில் குறிப்பிடப்பட்டிருந்த விடயங்களிலிருந்தான தாக்கத்தைத் தவிர்த்து நிதிக்கூற்றுக்கள் நிதியத்தின் 2022 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமையினையும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான அதனது நிதிசார் செயலாற்றலினையும் காசுப்பாய்ச்சலினையும் இலங்கை பொதுத்துறை கணக்கீட்டு நியமங்களுக்கு இணங்க உண்மையாகவும் நியாயமாகவும் பிரதிபலிக்கும் வகையில் நிதிக்கூற்றுக்கள் தயாரிக்கப்பட்டுள்ளன என்பது எனது அபிப்பிராயமாகும்.

## 1.2 முனைப்பழியுள்ள அபிப்பிராயத்திற்கான அடிப்படை

இந்த அறிக்கையின் 1.5 ஆம் பந்தியில் விபரிக்கப்பட்ட விடயங்களின் அடிப்படையில் எனது அபிப்பிராயம் முனைப்பழியுள்ளதாக்கப்படுகின்றது.

இலங்கை கணக்காய்வு நியமங்களுக்கு (இக.நி) இணங்க எனது கணக்காய்வினை நான் மேற்கொண்டேன். இக் கணக்காய்வு நியமங்களின் கீழான எனது பொறுப்புக்கள் எனது அறிக்கையில் நிதிக்கூற்றுக்களின் கணக்காய்விற்கான கணக்காய்வாளரின் பொறுப்புக்கள் பந்தியில் மேலும் விபரிக்கப்படுகின்றன. எனது முனைப்பழியுள்ள அபிப்பிராயத்திற்கான அடிப்படை ஒன்றினை வழங்குவதற்கு போதியளவும் பொருத்தமானதுமான கணக்காய்வுச் சான்றுகளை நான் பெற்றுக் கொண்டுள்ளேன் என நான் நம்புகிறேன்.

## 1.3 நிதிக்கூற்றுக்களிற்கான முகாமைத்துவத்தினதும் அவ் ஆளுகைக்கு உட்பட்ட தரப்பினர்களினதும் பொறுப்புக்கள்

இந்நிதிக்கூற்றுக்களை இலங்கை பொதுத்துறைக் கணக்கீட்டு நியமங்களிற்கு இணங்க தயாரித்து சரியாகவும் நியாயமாகவும் சமர்ப்பித்தல் மற்றும் மோசடி அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களிலிருந்து விடுபட்ட நிதிக்கூற்றுக்களைத் தயாரிப்பதற்கு அவசியமானதென முகாமைத்துவம் நிர்ணயிக்கின்ற அத்தகைய உள்ளகக் கட்டுப்பாடுகள் என்பவற்றிற்கு முகாமைத்துவம் பொறுப்பாக உள்ளது.

நிதிக்கூற்றுக்களைத் தயாரிக்கும் போது, நிதியத்தின் தொடர்ந்தியங்கும் இயலுமையை தீர்மானித்தல் முகாமைத்துவத்தின் பொறுப்பொன்றாக இருப்பதுடன் முகாமைத்துவமானது நிதியத்தை கலைப்பதற்கு கருதினால் அல்லது வேறு மாற்று வழி இல்லாவிட்டால் செயற்பாடுகளினை இடைநிறுத்த நடவடிக்கை எடுத்தால் தவிர தொடர்ந்தியங்கும் கணக்கீட்டு எண்ணக்கரு அடிப்படையினை பயன்படுத்துதல் மற்றும் மன்றம் தொடர்ந்தியங்குவதற்கு உரிய விடயங்களை வெளிப்படுத்துவதும் முகாமைத்துவத்தின் பொறுப்பொன்றாகும்.

நிதியத்தின் நிதி அறிக்கையிடல் செயன்முறை தொடர்பான பொறுப்பு, அவ் ஆளுகைக்குட்பட்ட தரப்பினர்களினால் ஏற்கப்படும்.

2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 16(1) ஆம் உப பிரிவின் பிரகாரம் மன்றத்தின் வருடாந்த மற்றும் காலரீதியான நிதிக்கூற்றுக்களை தயாரிக்கக்கூடியவாறு அதன் அனைத்து வருமானங்கள், செலவினங்கள், சொத்துக்கள் மற்றும் பொறுப்புக்கள் தொடர்பான புத்தகங்கள் மற்றும் பதிவேடுகளை முறையாக பேணுதல் வேண்டும்.

## 1.4 நிதிக்கூற்றுக்களிற்கான கணக்காய்வு தொடர்பில் கணக்காய்வாளரின் பொறுப்புக்கள்

ஒட்டு மொத்தமாக நிதிக்கூற்றுக்கள், மோசடி அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களிலிருந்து விடுபட்டதாக நியாயமான உறுதிப்படுத்தலொன்றைப் பெற்றுக்கொள்வது மற்றும் எனது அபிப்பிராயம் உள்ளடக்கப்பட்ட கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் அறிக்கை வழங்குவது எனது நோக்கமாகும். நியாயமான உறுதிப்படுத்தல் உயர் மட்டத்திலான உறுதிப்படுத்தலொன்றாக இருந்த போதிலும் இலங்கை கணக்காய்வு நியமங்களின் பிரகாரம் கணக்காய்வினை மேற்கொள்ளும் போது அது எப்போதும் பொருண்மையான தவறான கூற்றுக்களின் இல்லாமை என்பதன் உறுதிப்படுத்தலொன்றல்ல. மோசடி அல்லது தவறுகள் தனியாகவோ கூட்டாகவோ தாக்கமளிப்பதால் பொருண்மையான தவறான கூற்றுக்கள் இருக்க கூடியதாக இருப்பதுடன் இந்நிதிக்கூற்றுக்களை அடிப்படையாகக் கொண்டு பயன்படுத்துவோரால் பொருளதார தீர்மானங்கள் எடுக்கும் போது அது தொடர்பாக கருத்தில் கொள்ளப்படல் வேண்டும்.

துறைசார் வெளிப்படை மற்றும் தொழில்துறை பின்னணியுடன் இலங்கை கணக்காய்வு நியமங்களின் பிரகாரம் என்னால் கணக்காய்வு செய்யப்பட்டன. மேலும்,

- மோசடி அல்லது தவறுகளின் காரணமாக நிதிக்கூற்றுக்களின் ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்று ஆபத்தின் இனங்காணும் போதும் மதிப்பீட்டின் போது சந்தர்ப்பத்திற்கு பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளை திட்டமிடுவதன் மூலம் மோசடிகள் அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய ஆபத்துகளை தவிர்த்துக் கொள்வதற்கும் போதுமான மற்றும் பொருத்தமான கணக்காய்வுச் சான்றுகளைப் பெற்றுக்கொள்ளல் எனது அபிப்பிரயாத்திற்கு அடிப்படையாகும். பொருண்மையான பிறழ் கூற்றினால் எழும் தாக்கங்களினை விட மோசடிகளால் இடம்பெறும் தாக்கம் பாரியதாக இருப்பதுடன் தவறான கூட்டிணைவு, தவறான ஆவணங்களைத் தயாரித்தல், வேண்டுமென்றே விட்டுவிடுதல் அல்லது உள்ளக கட்டுப்பாட்டை தவிர்ப்புச் செய்தல் மோசடியொன்று ஏற்படுவதற்கு காரணமாகின்றது.

- சந்தர்ப்பங்களிற்குப் பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளை வடிவமைப்பதற்காக கணக்காய்வுடன் தொடர்புடைய உள்ளகக் கட்டுப்பாடுகள் தொடர்பான அறிவை பெற்றுக்கொள்வதற்காகவேயன்றி நிதியம் உள்ளகக் கட்டுப்பாடுகளின் செயற்திறன் மீது அபிப்பிராயமொன்றை தெரிவிக்கும் நோக்கத்திற்காக அல்ல.

- முகாமைத்துவத்தால் பின்பற்றப்பட்ட கணக்கீட்டுக் கொள்கைகளின் பொருத்தப்பாடுகளையும் பயன்படுத்திய கணக்கீட்டு மதிப்பீடுகள் மற்றும் தொடர்புடைய வெளிப்படுத்தல்களினையும் நியாயமாகவும் மதிப்பீடு செய்தல்.

- நிகழ்வுகள் அல்லது நிலைமைகள் காரணமாக நிதியத்தின் தொடர்ந்து இயங்குவது தொடர்பாக போதியளவில் நிச்சயமற்ற நிலைமையொன்று இருக்கின்றதா என்பது தொடர்பாக பெற்றுக்கொள்ளப்பட்ட கணக்காய்வுச் சான்றுகளை அடிப்படையாகக் கொண்டு கணக்கீட்டிற்காக மன்றத்தின் தொடர்ந்தியங்குவது தொடர்பாக அடிப்படையின் பயன்பாட்டின் பொருத்தப்பாட்டினை தீர்மானிக்கின்றது. பொருண்மையான நிச்சயமற்ற தன்மை காணப்படுகின்றது என நான் முடிவுக்குவந்தால், நிதிக்கூற்றுக்களில் அது தொடர்பாக வெளிப்படுத்துவதற்கு எனது கணக்காய்வு அறிக்கையின் மீது கவனம் செலுத்துதல் வேண்டியதுடன் அவ்வெளிப்படுத்தல்கள் பொருண்மையாக இல்லாதிருந்தால் எனது அபிப்பிராயத்தை வெளிப்படுத்த வேண்டும். எவ்வாறாயினும், எதிர்கால நிகழ்வுகள் அல்லது நிலைமைகள் நிதியத்தின் தொடர்ந்தியங்கும் நிலைமையை முடிவுறுத்த நேரலாம்.
- வெளிப்படுத்தல்கள் அடங்கலாக நிதிக்கூற்றுக்களின் ஒட்டுமொத்த சமர்ப்பித்தல், கட்டமைப்பு மற்றும் உள்ளடக்கங்களை மதிப்பீடு செய்தல் மற்றும் நியாயமான சமர்ப்பித்தலினை

நிறைவேற்றுவதற்கு அடிப்படையாகக் காணப்பட்ட கொடுக்கல் வாங்கல்கள் மற்றும் நிகழ்வுகளை நிதிக்கூற்றுக்களில் உள்ளடக்கப்பட்டுள்ளதா என்பதனை மதிப்பீடு செய்தல்.

இயலுமான வரையிலும் தேவையான எந்தவொரு சந்தர்ப்பத்திலும் பின்வருவனவற்றை பரீட்சிப்பதற்காக விடயப்பரப்பு விரிவுபடுத்தப்பட்டுள்ளது.

- தகவல்கள் சமர்ப்பித்தல் தொடர்பாக பார்க்கும் போது நிதியத்தின் செயற்பாடுகள் தொடர்ச்சியாக மதிப்பீடு செய்யப்படக்கூடிய வகையில் அதன் ஒழுங்கமைப்பு, முறைமைகள், வழிகாட்டிக் கோவை, பதிவேடுகள், அறிக்கைகள் மற்றும் ஏனைய ஆவணங்கள் முறையாகவும் போதியளவிலும் திட்டமிடப்பட்டுள்ளதா எனவும் அதன் முறைமைகள், வழிகாட்டிக் கோவை, பதிவேடுகள், அறிக்கைகள் மற்றும் ஏனைய ஆவணங்கள் ஆக்கபூர்வமாக பேணிச்செல்லப்படுகின்றதா என்பதும்,

- ஏதேனும் உரிய எழுத்துமூல சட்டத்திற்கோ அல்லது நிதியத்தின் நிர்வாக சபையினால் வழங்கப்பட்ட பொது அல்லது விசேட ஏற்பாடுகளுக்கு இணங்க மன்றம் செயற்படுகின்றதா என்பதும்,

- நிதியத்தின் அதன் அதிகாரங்கள், தொழிற்பாடுகள் மற்றும் கடமைகளின் பிரகாரம் செயற்பட்டிருந்ததா என்பதும் மற்றும் நிதியத்தின் வளங்கள் கால வரையறைகளினுள்ளேயும் பொருத்தமான சட்டங்களிற்கிணங்கவும் சிக்கனமாகவும் வினைத்திறனாகவும் ஆக்கபூர்வமாகவும் கொள்வனவு செய்யப்பட்டு பயன்படுத்தப்பட்டிருந்தனவா என்பதும் ஆகும்.

### 1.5 நிதிக்கூற்றுக்கள் தயாரித்தல் தொடர்பான கணக்காய்வு அவதானிப்புக்கள்

### 1.5.1 இலங்கைப் பொதுத்துறைக் கணக்கீட்டு நியமங்களுடன் இணங்காமை

| | குறிப்பிட்ட நியமங்களுடனான தொடர்புகளுடன் இணங்காமை | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|
| (அ) | இலங்கை பொதுத்துறை கணக்கீட்டு நியமம் 01 இன் 128 ஆம் பந்தியின் பிரகாரம் கணக்காய்விற்கு சமர்ப்பிக்கப்பட்ட நிதி நிலைமைக்கூற்று, நிதிச் செயலாற்றல் கூற்றின் முன் பக்கத்தில் ஒவ்வொரு உருப்படிக்கும் தொடர்புடைய குறிப்புகளில் காணப்படுகின்ற தொடர்புடைய தகவல்களுக்கு குறுக்காக குறிப்பிடும் முறையான முறையில சமர்ப்பிக்கப்படவில்லை. | 2023 ஆம் ஆண்டின் இறுதிக் கணக்குகள் தயாரிக்கப்படும்போது தொடர்புடைய உருப்படிகளுடன் தொடர்பான அட்டவணைகளில் இலக்கங்களைச் சேர்ப்பதற்கான நடவடிக்கை எடுக்கப்படும். | இலங்கை பொதுத்துறை கணக்கீட்டு நியமத்தின் பிரகாரம் நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். |
| (ஆ) | இலங்கை பொதுத்துறை கணக்கீட்டு நியமம் 01 இன் 150 ஆம் பந்தியின் பிரகாரம் நிதிக்கூற்றுக்களுடன், நிறுவனத்தின் இருப்பிடம், சட்டத்தன்மை, செயற்பாடுகளின் தன்மை, அதன் முக்கிய செயற்பாடுகளின் விளக்கம் மற்றும் செயல்பாடுகளை நிர்வகிக்கும் அரசியலமைப்பு பற்றிய குறிப்புக்கள் தொடர்பான தகவல்கள் சேர்க்கப்படவில்லை. | 2023 ஆம் ஆண்டின் இறுதிக் கணக்குகளின் மூலம் இலங்கை பொதுத்துறை கணக்கீட்டு நியமம் 01 இன் 150 ஆம் பந்தியின் பிரகாரம் தகவல்கள் சமர்ப்பிக்கப்படும். | இலங்கை பொதுத்துறை கணக்கீட்டு நியமத்தின் பிரகாரம் நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| (இ) | இலங்கை பொதுத்துறை கணக்கீட்டு நியமம் 15 இன் 14 ஆம் பந்தியின் பிரகாரம் வரவு செலவுத்திட்ட பெறுமதிகள் மற்றும் உண்மையான பெறுமதிகள் ஒப்பிடப்பட்டு நிதிக்கூற்றுக்களில் வரவு செலவுத்திட்ட நிரலொன்று சமர்ப்பிக்கப்படவில்லை. | அடுத்த ஆண்டு முதல் நிதிக்கூற்றுக்கள் தயாரிக்கப்படும்போது பொதுத்துறை கணக்கீட்டு நியமம் 15 இன் 14 ஆம் பந்தியின் பிரகாரம் நிதிக்கூற்றுக்களில் வரவு செலவுத்திட்ட நிரலொன்று சேர்க்கப்படுவதற்கு நடவடிக்கை எடுக்கப்படும். | இலங்கை பொதுத்துறை கணக்கீட்டு நியமத்தின் பிரகாரம் நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். |
| (ஈ) | இலங்கை பொதுத்துறை கணக்கீட்டு நியமம் 7 இன் 57 ஆம் பந்தியின் பிரகாரம் சொத்தின் ஒரு பொருளின் ஒவ்வொரு பகுதியும் அதன் மொத்த விலையுடன் ஒப்பிடும்போது குறிப்பிடத்தக்க செலவைக் கொண்டதாக தனித்தனியாக அடையாளம் காணப்பட வேண்டிய போதிலும் மொத்தக் கிரயம் ரூபா 127,636,460 ஆன நிலாவெளி பயிற்சி நிலைய கட்டிடத்துடன் 7 ஏக்கர் 37 பேர்ச் காணி, காணி மற்றும் கட்டிடமாக தனித்தனியாக இனங்காணப்படவில்லை. மீளாய்வாண்டில் கட்டிடத்தின் பெறுமானத் தேய்வுப் பெறுமதி கணிப்பிடப்பட்டு கணக்கீடு செய்யப்பட்டிருக்கவில்லை. | தற்போது நிலாவெளி பயிற்சி நிலையத்தில் பாதியளவு நிறைவடைந்த 05 அறைகளின் புனரமைப்பு பணிகள் ஆரம்பிக்கப்பட்டுள்ளன, பணிகள் நிறைவடைந்த பின்னர், இலங்கை பொதுத்துறை கணக்கீட்டு நியமம் 7 இன் 57 ஆம் பந்தியின் பிரகாரம் கட்டிடம் மற்றும் காணி தனித்தனியாக மதிப்பிடப்பட்டு அதன் பிரகாரம் கட்டிட தேய்மானம் கணிப்பிடப்பட்டு கணக்கீடு செய்யப்படுவதற்கான நடவடிக்கை எடுக்கப்படும். | இலங்கை பொதுத்துறை கணக்கீட்டு நியமத்தின் பிரகாரம் நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். |

### 1.5.2 கணக்கீட்டு குறைபாடுகள்

| | கணக்காய்வு அவதானிப்புக்கள் | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|
| (அ) | நிலையான சொத்துக்களின் கீழ் அலுவலக உபகரணங்களாக 13 மாவட்டங்களுக்கான மொத்தம் ரூபா 1,248,798 அடையாளம் காணப்படாத மீதியொன்று 1998 ஆம் ஆண்டிலிருந்து முன்னோக்கி கொண்டு செல்லப்பட்ட மீதியாகக் காட்டப்பட்டுள்ளது. அச்சொத்துக்கள் இனங்காணப்பட்டு நியாயமான பெறுமதியில் கணக்கீடு செய்யப்பட்டிருக்கவில்லை. | சமூகப் பாதுகாப்பு நிதியத்துக்குச் சொந்தமான சொத்துக்களை அடையாளம் காணும் வகையில் தனி இருப்புப் பட்டியலில் சேர்ப்பதற்கு மாவட்ட மட்டத்தில் அறிவுறுத்தப்பட்டுள்ளது. நிலையான சொத்துகளின் கீழ், 1998 ஆம் ஆண்டு முதல், அடையாளம் காணப்படாத நிலுவைகள் சரி செய்யப்படுவதற்கு நடவடிக்கை எடுக்கப்படும். | சொத்துக்கள் அடையாளம் காணப்பட்டு நியாயமான பெறுமதியில் கணக்கீடு செய்யப்படுவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். |
| (ஆ) | நிதியத்திற்கான சொத்துக்களை அடையாளம் காணும் வகையில் கணக்கெடுப்பு அறிக்கைகள் சமர்ப்பிக்கப்படாமையால் 2021 திசெம்பர் 31 இல் கிரயம் ரூபா 46,133,459 ஆன நிதியத்தின் | சமூக பாதுகாப்பு நிதியத்திற்கு சொந்தமான சொத்துக்களை தனித்தனியாக கண்டறிந்து, தலைமை அலுவலகத்திற்கு தகவல் அனுப்பும் வகையில், தனித்தனியாக இருப்பு வைத்து | நிதியத்திற்குரிய சொத்துக்களை கணக்கெடுப்பு செய்யப்படுவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட |

| | | | |
|---|---|---|---|
| | சொத்துக்களை (நிலாவெளி தவிர்த்து) சான்றுறுதிப்படுத்த முடியாதிருந்தது. | பராமரிப்பதற்கு மாவட்டங்களுக்கு உத்தரவிடப்பட்டு, இதுவரை சுமார் 21 மாவட்டங்கள் மூலம் தகவல்கள் வழங்கப்பட்டுள்ளன. அதன் பிரகாரம் இருப்பு கணக்கெடுப்பு எதிர்காலத்தில் மேற்கொள்ளப்படும். | வேண்டும். |
| (இ) | 2021 ஏப்ரல் 6 அன்று, சமுர்த்தி அபிவிருத்தி இராஜாங்க அமைச்சின் நிலையத்திற்கு வழங்கப்பட்ட 2 நடமாடும் வளிப்பதனாக்கி இயந்திரங்களின் பெறுமதி கணக்கிடப்பட்டு கணக்கீடு செய்யப்பட்டிருக்கவில்லை. இந்த உபகரணங்கள் 2021 ஆம் ஆண்டின் கணக்கெடுப்பு அறிக்கையிலும் உறுதிப்படுத்தப்படவில்லை. | இந்த இரண்டு நடமாடும் வளிப்பதனாக்கி இயந்திரங்களும் நிலாவெளி பயிற்சி நிலையத்தில் பராமரிக்கப்படும் இருப்புப் பதிவேட்டில் இணைக்கப்பட்டுள்ளதுடன், எதிர்காலத்தில் அதன் பெறுமதி கணக்கிடப்பட்டு நிதிக்கூற்றுக்களில் உள்ளடக்கப்படும். | அனைத்து சொத்துக்களும் கணக்கீடு செய்யப்படுவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். |

**1.6 சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் மற்றும் முகாமைத்துவத் தீர்மானங்கள் போன்றவற்றுடன் இணங்காமை**

| | சட்டம், விதிகள் மற்றும் பிரமாணங்களுடனான தொடர்பு | இணங்காமை | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|---|
| (அ) | இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசின் நிதிப்பிரமாணக்கோவை. 381(1) | 2017 ஆம் ஆண்டு முதல் வங்கி நடைமுறைக் கணக்கொன்று பேணப்பட்ட போதிலும், இவ்வறிக்கைத் திகதி வரை திறைசேரி அங்கீகாரம் பெறப்படவில்லை. | இது குறித்து நிலாவெளி பயிற்சி நிலையங்களில் விசாரித்து,அது தொடர்பாக தேவையான நடவடிக்கை எடுக்கப்படும். | நிதிப் பிரமாணத்தின் பிரகாரம் நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |
| (ஆ) | பெறுகை வழிகாட்டிக்கோவையின் 4.2.1 | 2022 ஆம் ஆண்டிற்காக நிதியத்தினால் ரூபா 52,278,320 ஆன கணனிகள்,கட்டிட நிர்மாணங்கள் மற்றும் இயந்திர உபகரணத் திருத்தங்களுக்காக பெறுகைகள் மேற்கொள்ளப்பட்டிருந்த போதிலும் பெறுகைத் திட்டமொன்று தயாரிக்கப்பட்டிருக்கவில்லை. | மிகுதி கொள்வனவுகளுக்காக பெறுகை வழிகாட்டிக் கோவையின் 4.2.1 பிரகாரம் பெறுகை திட்டமொன்றைத் தயாரிப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்படும். | பெறுகை வழிகாட்டிக் கோவையின் ஏற்பாடுகளின் பிரகாரம் நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |
| (இ) | 2018 பெப்ரவரி 20 ஆம் திகதிய பொது நிர்வாகச் சுற்றறிக்கை 2018/03 பந்தி | அமைச்சின் செயலாளரின் தனிப்பட்ட பரிந்துரை பெறப்படாமல் நிதியத்தின் நம்பிக்கைப் பொறுப்புச்சபையின் ஒப்புதலின் அடிப்படையில் | நம்பிக்கைப் பொறுப்புச்சபைக்குள்ள அதிகாரத்தின் பிரகாரம் 2021 திசெம்பர் 03 ஆம் திகதிய நம்பிக்கைப் பொறுப்புச்சபையின் | அமைச்சின் செயலாளரின் தனிப்பட்ட பரிந்துரை பெறப்பட வேண்டும். |

| | |
|---|---|
| 2021 நவம்பர் 08 முதல் 2024 மே 07 வரை நீடிப்பு வழங்கப்பட்டு மாதந்தோறும் ரூபா 107,415 சம்பளத்திற்கு ஓய்வு பெற்ற அதிகாரியொருவர் கணக்காளர் பதவிக்கு நியமிக்கப்பட்டிருந்தார். | தீர்மானத்தின் அடிப்படையில் இந்நியமனம் வழங்கப்பட்டது. அதன் பிரகாரம் அந்நியமனத்திற்கான மாதாந்தப்படிகளை தீர்மானிப்பதற்காக பொ.நி.சு. 3/2016 மற்றும் 3/2018 பயன்படுத்தப்பட்டன. |

## 2. நிதி மீளாய்வு

### 2.1 நிதி விளைவுகள்

மீளாய்வாண்டின் செயற்பாட்டு விளைவுகள் ரூபா 1,328,591,826 ஆன மிகையாக இருந்ததுடன் அதற்கு எதிராக முன்னைய ஆண்டின் பற்றாக்குறை ரூபா 1,518,333,556 ஆக இருந்தது. அதன்படி நிதி விளைவுகளில் ரூபா 2,846,925,382 ஆன முன்னேற்றமொன்று அவதானிக்கப்பட்டது. பயனாளிகளின் பங்களிப்புத்தொகை அதிகரித்தமை மற்றும் முதலீட்டு வட்டி வருமானம் அதிகரித்தமை இம்முன்னேற்றத்திற்கு பிரதான காரணங்களாக இருந்தன.

## 3. செயற்பாட்டு மீளாய்வு

### 3.1 சர்ச்சைத்தன்மையான கொடுக்கல் வாங்கல்

| கணக்காய்வு அவதானிப்பு | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| சமுர்த்தி சமூக அபிவிருத்தி நம்பிக்கைப்பொறுப்பு பத்திரத்தின் 6(4) ஆம் பந்தியின் பிரகாரம் அனுசரணையாளரால் துணைப் பிரதிநிதியாக ஒரு நம்பிக்கைப் பொறுப்பாளரை நியமிப்பதற்கான அதிகாரம் உள்ளது என்பதாக மற்றும் 6(9) ஆம் பந்தியின் பிரகாரம் எந்தவொரு உறுப்பினராலும் செய்யப்படுகின்ற பிரதி உபகாரத்திற்காகவும் சம்பளம், படிகள் அல்லது போனஸ் கொடுப்பனவொன்று வழங்கப்பட முடியாதெனக் குறிப்பிடப்பட்டிருந்த போதிலும் திணைக்களத்தின் பணிப்பாளர் நாயகம், நிதியத்தின் தலைவர் பதவியை வகித்த 2020 பெப்ரவரி முதல் 2022 திசெம்பர் வரை பதில் கடமைச் சம்பளமாக ரூபா 770,000 ஐ பெற்றிருந்தார். | 2014 ஆம் ஆண்டு சமுர்த்தி திணைக்களம் ஸ்தாபிக்கப்படுவதற்கு முன்னர் இந்த நிதியம் தனியான நிதியமாக செயற்பட்டதுடன் சமுர்த்தி ஆணையாளர் நாயகம் இந்த நிதியத்தின் அதிகாரபூர்வ தலைவராக கடமையாற்றினார். அன்றைய காலப்பகுதியில் சேவையாற்றிய தலைவர்களுக்கும் அத்துடன் திணைக்களத்தின் கீழ் பணிப்பாளர் நாயகத்திற்கும் இந்த கொடுப்பனவுகள் நம்பிக்கைப்பொறுப்புச் சபையின் அங்கீகாரத்துடன் வழபெற்றுள்ளனர். | நம்பிக்கைப்பொறுப்பு பத்திரத்தின் பிரகாரம் செயற்பட வேண்டியமை. |

### 3.2 செயற்பாட்டு செயற்திறனின்மை

| கணக்காய்வு அவதானிப்பு | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| நிலாவெளி பயிற்சி நிலையத்தின் 2021 மற்றும் 2022 ஆம் ஆண்டுகளில், மீண்டெழும் செலவினம் முறையே ரூபா 1,389,766 மற்றும் ரூபா 1,907,113 ஆகவும், மூலதனச் செலவு முறையே ரூபா 2,258,116 மற்றும் ரூபா 2,495,128 ஆகவும் இருந்தபோதிலும் , மீளாய்வாண்டில் 16 நாட்களில் பயிற்சியாளர்கள் உட்பட, 216 பயிற்சியாளர்கள் கலந்துகொண்ட. 03 நிகழ்ச்சிகள் மட்டுமே நடைபெற்றன. இந்த நிலையத்தில் ரூபா 128 மில்லியன் ஆன சொத்துக்கள் இருந்தும், இச்சொத்துக்கள் முறையாக நிர்வகிக்கப்படாமை, வருமானம் ஈட்டுவதற்கு தேவையான நடவடிக்கைகள் நிர்வாகத்தினால் எடுக்கப்படாமை மற்றும் கண்காணிப்பு நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படாமை போன்ற காரணங்களால் சமூக பாதுகாப்பு நிதியத்தினால் செய்யப்பட்ட செலவுகள் விளைவற்றதாகக் காணப்பட்டமை அவதானிக்கப்பட்டது. | நாட்டில் ஏற்பட்டுள்ள கொவிட் தொற்று நிலைமை, எரிபொருள் நெருக்கடி மற்றும் 2021 மற்றும் 2022 ஆம் ஆண்டுகள் தொடர்பில் அரசாங்கம் எடுத்த கொள்கை முடிவுகள் காரணமாக அரச மற்றும் தனியார் துறைகளில் பயிற்சி திட்டங்கள் மற்றும் பயிற்சி அமர்வுகள் மட்டுப்படுத்தப்பட்டிருந்தன. | சொத்துக்கள் திறம்பட மற்றும் பொருளாதார ரீதியாக நிர்வகிக்கப்பட வேண்டும். |

### 3.3 விளைவற்ற மற்றும் குறைப்பயன்பாடுடைய ஆதனம், பொறி மற்றும் உபகரணம்

| கணக்காய்வு அவதானிப்பு | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| சமுர்த்தி மானியமாக பயனாளிகளுக்கு வழங்கப்பட்ட தொகையில் இருந்து நிதியத்திற்கு அறவிடப்பட்ட மாதாந்த பங்களிப்புத் தொகையில் ரூபா 7,560,000 பயன்படுத்தப்பட்டு 2003 ஆம் ஆண்டு பொத்துவில் சுற்றுலா பங்களா நிர்மாணிக்கப்பட்ட போதிலும் குறித்த காணிக்கான சட்ட உரிமை திணைக்களத்திற்கு இருக்கல்லை. 2004 ஆம் ஆண்டில கொள்வனவ செய்யப்பட்ட ரூபா 1,082,284 கிரயமான சொத்துக்கள் சுற்றுலா பங்களாவுக்குச் சொந்தமான போதிலும் வருமானம் ஈட்டுவதற்குத் தேவையான நடவடிக்கைகளை நிர்வாகத்தினால் எடுக்கப்படாமையால் இச்சொத்து விளைவற்றதாகக் காணப்பட்டது. | வனவிலங்கு பாதுகாப்புத் திணைக்களத்திற்குச் சொந்தமான காணியில் இந்தக் கட்டுமானம் மேற்கொள்ளப்பட்டுள்ளதால், சமூகப் பாதுகாப்பு நிதிய நம்பிக்கைப் பொறுப்புச் சபையின் அறிவுறுத்தல்களின்படி, கட்டிடத்தில் உள்ள பொருட்கள் மற்றும் உபகரணங்களின் இருப்பு ஆவணங்களின்படி சரிபார்க்கப்பட்டு, அதன்படி பட்டியலிடப்பட்டு நிலாவெளி பயிற்சி நிலையத்திடம் ஒப்படைக்கப்படுவதற்கான நடவடிக்கைகள் எடுக்கப்பட்டு வருவதுடன் கடடிடத்தை வனப் பாதுகாப்புத் திணைக்களத்திற்கு் | செலவிடப்பட்ட பணத்துடன் ஒப்பிடுகையில் பொருளாதார செயல்திறனைப் பெறக்கூடிய வகையில் முடிவுகள் எடுக்கப்பட வேண்டும் |

| | | |
|---|---|---|
| | ஒப்படைப்பதற்காக மீண்டும் வனவிலங்கு பாதுகாப்புத் திணைக்களத்திற்கு எழுத்து மூலமாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது. | |

### 3.4 பெறுகை முகாமைத்துவம்

| கணக்காய்வு அவதானிப்பு | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| 340 கணினிகள் கொள்வனவு தொடர்பாக 2020 திசெம்பர் 14 ஆம் திகதிய பெறுகைக் குழுவினால் அலகொன்று ரூபா 116,450 வீதம் ரூபா 39,593,000 குறைந்த மனுவை சமர்ப்பித்த நிறுவனம் தேர்ந்தெடுக்கப்பட்டது. உள்ளூர் உற்பத்தியாளர்களுக்கு முன்னுரிமை அளிக்கப்பட வேண்டுமென்ற என்ற அடிப்படையில் அரச நிறுவனங்கள் செயல்பட வேண்டும் என்று ஏலதாரர் ஒருவர் சுட்டிக்காட்டியதை அடுத்து, மீண்டும் விலை மனுக்கள் அழைக்கப்பட்டு, 2021 யூன் 08 ஆம் திகதிய பெறுகை முடிவின்படி தெரிவு செய்யப்பட்ட வழங்குநர் இரண்டாம் விலைமனுக் கோரப்பட்டதன் பிரகாரம் அதிகபட்ச விலைமனுவை சமர்ப்பித்த நிறுவனமாக இருந்ததுடன் அந்த மனுதாரர் உள்ளூர்த் தேர்வைக் கொண்ட ஒரேயொரு நிறுவனமாக தொழில்நுட்ப மதிப்பீட்டுக் குழுவினால் தீர்மானிக்கப்பட்டது. இதன் பிரகாரம் ரூபா 149,632 வீதம் 340 கணினிகள் ரூபா 50,874,880 ஆன (வட் உட்பட) விலைக்கு வாங்கப்பட்டன. முதல் பெறுகையின்போது ரூபா 39,593,000 ஆன பெறுமதிக்கு வாங்குவதற்கான திறன் இருந்தும், விலைமனுக்கோரல் தொடங்கப்பட்ட காலத்திற்கு பொருந்தாத சுற்றறிக்கையைப் பின்பற்றி மீண்டும் பெறுகை மெற்கொள்ளப்பட்ட காரணத்தால் நிதியத்திற்கு ரூபா 11,281,800 ஆன நட்டம் ஏற்பட்டது. | மீண்டும் விலை மனுக்கோரப்பட்டபோது உள்ளூர் உற்பத்தியாளர்களுக்கு முன்னுரிமை அளிக்கப்பட வேண்டுமென்ற அரச நிதிச்சுற்றறிக்கை 03/2022 கரத்திற் கொள்ளப்பட்டிருந்ததடன் அதன் பிரகாரம் உள்ளூரில் உற்பத்தி செய்யப்படுகின்ற வகையின் கீழ் விலை மனுக்களை வழங்கியிருந்த ஒரே நிறுவனம் குறைந்த விலையை வழங்கியிருந்ததுடன் அந்த நிறுவனத்திடமிருந்து கணினிகள் கொள்வனவு செய்யப்பட்டன. அதற்காக இணங்கப்பட்ட பெறுமதி ரூபா 149,632 வீதம் 340 கணனிகளுக்காக ரூபா 50,847,880 செவவிடப்பட்டிருந்தது. | பெறுகை நடை முறைகளின் மூலம் எதிர்பார்க்கப்படுகின்ற பொருளாதாரம் சிக்கனமாகவும், வெளிப்படைத் தன்மையுடனும் நிறைவேற்றப்படும் வகையில் பெறுகைகள் மேற்கொள்ளப்பட வேண்டும். |

## 4. கணக்களிப்பொறுப்பும் நல்லாளுகையும்

### 4.1 பாதீட்டுக் கட்டுப்பாடு

| கணக்காய்வு அவதானிப்பு | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| 2020 ஆகஸ்ட் 28 ஆந் திகதிய 01/2020 ஆம் இலக்க அரச நிதிச் சுற்றறிக்கையின் 15 ஆம் பந்தியில் உள்ளடக்கப்பட்ட நிதிப் பிரமாணம் 877(1)(இ) இன் பிரகாரம் எதிர்வரும் ஆண்டுக்கான வரவு செலவுத் திட்டம் தயாரிக்கும்போது நடப்பாண்டு செப்டெம்பர் 30 ஆம் திகதிக்கு முன்னர் அமைச்சின் செயலாளரின் அங்கீகாரத்துடன் பொதுத்திறைசேரியின் அங்கீகாரத்தைப் பெற்றுக் கொள்வதற்காக தேசிய வரவு செலவுத் திட்டத்தின் பணிப்பாளர் நாயகத்திற்கு அனுப்பி வைக்கப்பட்டு அதன் பிரதியொன்று அரச நிதி பணப்பாளர் நாயகத்திற்கு அனுப்பி வைக்கப்பட வேண்டிய போதிலும் அதன் பிரகாரம் நடவடிக்கை எடுக்கப்படவில்லை. மேலும், நிதியத்தின் செலவினங்களுக்காக மட்டுமே செலவின மதிப்பீடுகள் தயாரிக்கப்பட்டிருந்ததுடன் வருமான மதிப்பீடுகள் தயாரிக்கப்பட்டிருக்க வில்லை. | சுற்றறிக்கைப் பிரகாரம் எதிர்வரும் ஆண்டில் நடவடிக்கை எடுக்கப்படும். | நிதிப் பிரமாணம் மற்றும் சுற்றறிக்கை ஆலோசனையின் பிரகாரம் உரிய காலத்தில் வரவு செலவுத் திட்டம் தயாரிக்கப்பட்டு சமர்ப்பிக்கப்பட் வேண்டும். |